சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரசன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்நோப சாந்தயே

ஓம் பூர்புவஸ்ஸுவ: தத்ஸவிதுர்வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி
தியோயான: ப்ரசோதயாத்

கஜானனம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமா ஸுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்

கணனாம் த்வா கணபதிம் ஹவாமஹே
கவிம் கவீனாம் உபமஸ்ர வஸ்தமம்
ஜ்யேஷ்டராஜம் பிரம்மணாம் ப்ரம்மணஸ்பத
ஆன ச்ருண்வந் ஊதிபிஸீத ஸாதனம் :

அகஜானன பத்மார்க்கம் | கஜானனம் அஹர்நிசம்
அநேகதம் தம் பக்தாநாம் | ஏகதந்தம் உபாஸ்மஹே

வக்ர துண்ட மஹாகாய சூர்ய கோடி ஸமப்ரப|
நிர்விக்னம் குரு மே தேவ ஸர்வ கார்யேஷு ஸர்வதா||

குரு பிரம்மா

குரு விஷ்ணு

குரு தேவோ மகேஷ்வரக

குரு ஷாக்ஷாத்

பர பிரம்மா

தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ...

ஞானாந்தமயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம்

ஆதாரம் ஸர்வ வித்யானாம் ஹயக்ரீவ முபாஸ்மஹே

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு*

பலகோடி நூறாயிரம்

மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!* உன்

சேவடி செவ்வித்திருக்காப்பு

அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு*

வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு*

வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு*

படைபோர் புக்கு முழங்குமப் பாஞ்சசன்னியமும் பல்லாண்டே

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி

நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரி பெய்து

ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடுகயல் உகளப்

பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப

தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி

வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்

நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்!

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே

ஸ்ரீய காந்தாய கல்யாண நிதயே நிதயேர்த்தினாம்

ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம்

நமப் பார்வதி பதையே அரகர மகாதேவா

தென்னாடுடைய சிவனே போற்றி ! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !

அண்ணாமலை எம் அண்ணா போற்றி ! கண்ணாரமுதக் கடலே போற்றி !

சைவத்தின் மேல் சமயம் வேறில்லை அதில்சார் சிவமாம்

தெய்வத்தின்மேல் தெய்வம்இல்லெனும் நான்மறைச் செம்பொருள்

வாய்மை வைத்த சீர்திருத் தேவாரமும் திருவாசகமும்

உய்வைத் தரச்செய்த

நால்வர் பொற்றாள் எம்உயிர்த்துணையே

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது

வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்

கடிகணபதி வர அருளினன் மிகுகொடை

விடிவினர் பயில்வலி வலமுறை இறையே”

திரு ஞான சம்பந்தர்:

தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண் மதி சூடி

காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளம் கவர் கள்வன்

ஏடுடைய மலரான் முனைநான் பணிந்து ஏத்த அருள் செய்த

பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே!

அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கையலர் மேய,

பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மான் இவன் தன்னை,

ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரை செய்த,

திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே

மங்கையர் கரசி வளவர் கொண் பாவை வரிவளை கை மட மானி

பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாள் தோறும் பரவ

பொங்கழல் ஒருவன் பூத நாயகன்லால் வேதமும் பொருள்களும் அருளி

அங்கையர்கன்னி தன்னோடும் அமர்ந்த ஆலவாயாவதும் இதுவே

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு

சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு

தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு

செந்துவர் வாய் உமை பங்கன் திருஆலவாயான் திருநீறே.

அப்பர்/திருநாவுக்கரசர்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்

பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினனுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன்

நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன்னாமம்என் னாவில் மறந்தறியேன்

உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய் உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்

அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

மாசில் வீணையும் மாலை மதியமும்

வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்

மூசு வண்டறை பொய்கையும் போன்றதே

ஈச னெந்தை யிணையடி நீழலே.

சுந்தரன்

பித்தா பிறை சூடீ பெருமானே அருளாளா

எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை

வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்

அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே.

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து

மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே

மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே

அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்

திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்

இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்

இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்

வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்

விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்

அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்

ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்

பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்

திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்

முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்

முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்

அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்

ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

மாணிக்க வாசகர்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்

சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கள்

மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்

மாதேவன்வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்

வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து

போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்

ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே

ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்

முருகன்

ஆறிரு தடந்தோள் வாழ்க

ஆறுமுகம் வாழ்க – வெற்பைக்

கூறுசெய் தனிவேல் வாழ்க

குக்குடம் வாழ்க – செவ்வேள்

ஏறிய மஞ்சை வாழ்க

யானைதன் அணங்கு வாழ்க

மாறில்லா வள்ளி வாழ்க

வாழ்க சீர் அடியார் எல்லாம்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே

ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே

கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே

குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே

மாறுபடி சூரரைவ தைத்தமுக மொன்றே

வள்ளியை மணப்புணர வந்தமுக மொன்றே

ஆறுமகு மானபொரு ணீயருளல் வேண்டும்

ஆதி யருணாசல மமர்ந்த பெருமாளே.

முத்தை தரு பத்தி திரு நகை

அத்திக்கு இறை சத்தி சரவண

முத்திக்கு ஒரு வித்து குருபர என ஓதும்

முக்கண் பரமற்கு சுருதியின்

முற்பட்டது கற்பித்து இருவரும்

முப்பத்து மூ வர்க்கத்து அமரரும் அடி பேண

பத்து தலை தத்த கணை தொடு

ஒற்றை கிரி மத்தை பொருது ஒரு

பட்ட பகல் வட்ட திகிரியில் இரவாக

பத்தற்கு இரதத்தை கடவிய

பச்சை புயல் மெச்ச தகு பொருள்

பட்சத்தொடு ரட்சித்து அருள்வதும் ஒரு நாளே ?

தித்தித்தெய ஒத்த பரிபுர

நிர்த்த பதம் வைத்து பயிரவி

திக்கு ஒட்க நடிக்க கழுகொடு கழுது ஆட

திக்கு பரி அட்ட பயிரவர்

தொக்கு தொகு தொக்கு தொகுதொகு

சித்ர பவுரிக்கு த்ரி கடக என ஓத

கொத்து பறை கொட்ட களம் மிசை

குக்கு குகு குக்கு குகுகுகு

குத்தி புதை புக்கு பிடி என முது கூகை

கொட்புற்று எழ நட்பு அற்ற அவுணரை

வெட்டி பலி இட்டு குலகிரி

குத்துப்பட ஒத்து பொர வ(ல்)ல பெருமாளே.

தீபாராதனை

நாத விந்து கலாதி நமோ நம

வேத மந்திர ஸ்வரூபா நமோ நம

ஞான பண்டித ஸ்வாமி நமோ நம வெகுகோடி

நாம சம்பு குமாரா நமோ நம

போக அந்தரி பாலா நமோ நம

நாக பந்த மயூரா நமோ நம பரசூரர்

சேத தண்ட வினோதா நமோ நம

கீத கிண்கிணி பாதா நமோ நம

தீர சம்பிரம வீரா நமோ நம கிரிராஜ

தீப மங்கள ஜோதி நமோ நம

தூய அம்பல லீலா நமோ நம

தேவ குஞ்சரி பாகா நமோ நம அருள்தாராய்

ஈதலும் பல கோலால பூஜையும்

ஓதலும் குண ஆசார நீதியும்

ஈரமும் குரு சீர்பாத சேவையும் மறவாத

ஏழ்தலம் புகழ் காவேரியால் விளை

சோழ மண்டல மீதே மனோஹர

ராஜ கம்பீர நாடாளு நாயக வயலூர

ஆதரம் பயிலாரூரர் தோழமை

சேர்தல் கொண்டவரோடே முன்னாளினில்

ஆடல் வெம்பரி மீதேறி மாகயிலையிலேகி

ஆதி அந்தவுலாவாசு பாடிய

சேர்தல் கொங்குவை காவூர் நன்னாடதில்

ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே